## கடற்றொழில் வெகுமதி நிதியம் - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழில் வெகுமதி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் காரணமாக நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுக்கான இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் மற்றும் நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,
- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிதியத்தினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் சட்டரீதியான நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்ட வழக்குகள் தொடர்பாக மாவட்ட கடற்றொழில் அலுவலகம், நீதிமன்றம், கடற்படை என்பவற்றின் பொறுப்பில் உள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை பெறுமதி மதிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கான கொள்கை இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இப்பொருட்களின் சட்ட நடவடிக்கையை முடிவுறுத்தி அரசுடமையாக்கப்பட்டு எங்களுக்கு ஒப்படைக்கப்படும் வரை திணைக்களத்தின் ஒரு சொத்து அல்ல என்பதனால் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. எனவே 2016 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வின் போது விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் இதனை ஒரு குறிப்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களையும் இனங்காண்பதற்காக தேவையான கணக்கீட்டு கொள்கை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 2014 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 433,200 தொகை 2019 சனவரி மாதத்தின் போது வெகுமதிப் படியாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும், செலுத்த வேண்டிய வெகுமதிப் படியை திரட்டு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பகுதியையும் கணிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு திணைக்களத்திற்கு இறுதியான வழக்குத் தீர்ப்புக்களை உள்ளடக்கிய அறிக்கை கிடைத்ததன் பின்னர் வெகுமதிப் படிகள் செலுத்தப்படும். அதற்கிணங்க கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாததனால் கடந்த ஆண்டிற்காக இப்படிகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. ரூபா 433,200 பணம் 2014 ஆம் ஆண்டிலேயே கிடைத்திருந்தது. எனினும் | ஒவ்வொரு ஆண்டிலும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளுக்குப் பங்களிப்புச் செய்த உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய படிகளுக்கான தேவையான நிதி ஏற்பாடு கணிப்பிடப்பட்டு ஒவ்வொரு நிதி ஆண்டின் நிதி செயலாற்றல் அறிக்கையில் ஒரு செலவாக கணக்கீடு செய்யப்பட்டு ஆண்டின் சரியான நிலைமையை நிதிக்கூற்றில் வெளிப்படுத்த வேண்டும்.. |

| | | |
|---|---|---|
| | இப்பணத்திற்குரிய வழக்குத் தீர்ப்புக்கள் 2019 சனவரி மாதத்திலேயே கிடைத்திருந்தது. அந்த அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் நிலுவையான முழுப் பணத்தையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஆ) 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்படாதிருந்த 03 வழக்குகளுக்குரிய வெகுமதி நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 113,470 தொகையான பெற வேண்டிய வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. பூர்த்தி செய்யப்பட்ட 11 வழக்குகளுக்குரிய ரூபா 27,740 தொகை பெறவேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதிக் கணக்குகளில் தகவல்கள் சரியானது என தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் இது செயலாற்றல் அறிக்கையில் குறைபாடு எனத் தோன்றுகின்றது. | குறித்த ஆண்டிற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை சரியாகக் கணித்து கணக்கீடு செய்வதன் மூலம் நிதியத்தின் சரியான நிலைமையை அந்த நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 2013 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டுவரும் ரூபா 2,046,993 தொகையான பெறவேண்டிய மீன் விற்பனை வருமானத்தில் ரூபா 1,528,073 அல்லது 75 சதவீதம் 2017 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கிடைக்க வேண்டிய மீன் விற்பனை வருமானமாகும். மீளாய்வாண்டின் போது 2017 ஆம் ஆண்டிற்கான நிலுவை வருமானத்தில் ரூபா 12,000 மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்ததனால் நிலுவை வருமானத்தை அறவீடுசெய்தல் பலவீனமான நிலையில் காணப்பட்டது. | நீதிமன்றங்களிலிருந்து திணைக்களத்திற்கு இந்த வருமானத்தை அனுப்புதல் தாமதித்ததன் காரணமாக இந்நிலைமை உருவாகியுள்ளது. | நிலுவை வருமானங்களை அறவீடு செய்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) 1996 இன் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அதிகாரச்சட்டத்தின் 59(4) ஆம் உப பிரிவு | உத்தியோகத்தர்களுக்கும் தகவல்களை வழங்குவோர்களுக்கும் வேளைக்கு வேளைக்கு பொருத்தமானது என பணிப்பாளர் கருதுகின்ற ஏதாவது பணத்தை வெகுமதிப் பணமாக வழங்குவதற்கான நடைமுறை தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக தொடர்புபட்ட அனைத்து உத்தியோகத்தர்களுடனும் கலந்துரையாடி செலுத்த வேண்டிய பணத்தின் அளவும் செலுத்த வேண்டிய சந்தர்ப்பமும் தொடர்பான நடைமுறையைத் தயாரிப்பதற்கு குறித்துக் கொள்கின்றேன். | சுற்றுவளைப்புச் செய்கின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் தகவல்களை வழங்குபவர்களை ஊக்குவிப்பதற்காக போதியளவான வெகுமதிப் பணத்தை வழங்குவதற்காக தேவையான நடைமுறையினைத் தயாரித்தல் உயர் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமணாங்கள் 133(1) மற்றும் 2011 திசெம்பர் 23 ஆந் திகதிய டீ/எம்/ஏ/06 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கை | 2013 ஆம் ஆண்டிலிருந்து வெகுமதி நிதியம் சம்பந்தமான உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பிரதான முகாமைத்துவ உதவியாளரைத் தவிர்த்து ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களும் புதிதாக நியமனத்தைப் பெற்றுக்கொண்ட அனுபவம் மிகவும் குறைவான உத்தியோகத்தர்களாக இருப்பதனால் அப்பிரிவின் செயற்பாடுகளை மேற்கொள்ளல் சிக்கலாக உள்ளது. | வெகுமதி நிதியம் சம்பந்தமாக உள்ளகக் கணக்காய்வினை நடைமுறைப்படுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 610,145 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 344,465 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 265,680 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றம் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் மற்றும் மீன் விற்பனைகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 265,680 ஆல் அதிகரித்தமை பிரதானமாக காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) சுற்றி வளைப்புக்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிப் பணத்தை வழங்குதல் தாமதமின்றி செய்யப்பட வேண்டிய போதிலும், 2014, 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் வழக்குகளைத் தாக்கல் செய்தல் முறையே 271, 348, 488, 427 மற்றும் 327 ஆக மேற்கொள்ளப்பட்டிருந்தும் 2014, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக எதுவித பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிப் பணத்தை வழங்குவதற்காக உறுதியான நடைமுறை தயாரிக்கப்படாமையின் காரணமாக சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கை சுற்றி வளைப்புக்காக உத்தியோகத்தர்களை ஊக்குவித்தல் இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டவாறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தும் அவ்வழக்கு நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு பல ஆண்டுகள் எடுத்ததன் காரணமாக அவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்காக அந்த ஆண்டிலே கொடுப்பனவு செய்யப்படக்கூடிய இயலுமை இல்லை. அனைத்து வழக்குகளையும் முடிவுறுத்தி தீர்ப்புக்கள் திணைக்களத்திற்கு சாதகமாக கிடைத்திருக்காததன் காரணமாக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், சுற்றி வளைப்புக்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொள்கையில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிலும் சுற்றி வளைப்புக்கள் இடம்பெற்றுள்ளன. 2017 ஆம் ஆண்டில் 52 சுற்றிவளைப்புக்களும் 2018 ஆம் ஆண்டின் போது 41 சுற்றி வளைப்புக்களுக்கும் இடம்பெற்றுள்ளன. | சுற்றிவளைப்புக்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிப் பணத்தை வழங்குதல் தாமதமின்றி செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதற்கிணங்க உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கப்படாமை காணப்படவில்லை. | |
| (ஆ) | மாவட்ட கடற்றொழில் அலுவலகத்தால் சட்டவிரோத மீன்படி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்வதன் மூலம் நீதிமன்றங்களால் தண்டப்பணமாக ரூபா 2,232,000 மீளாய்வாண்டின் போது குற்றவாளிகளிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. எனினும் அறவிடப்படுகின்ற தண்டப்பணத்தில் எச்சதவீதத்தினையும் கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்குப் பெற்றுக்கொள்வதற்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கல் அதிகாரச்சட்டத்திலுள்ள விடயங்களை திருத்தம் செய்யாமையின் காரணமாக அந்த தண்டப்பண வருமானத்தில் ஒரு பகுதியினை கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | கடற்றொழில் உத்தியோகத்தர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின்போது நீதிமன்றத்தால் விதிக்கப்படுகின்ற தண்டப்பணத்தை கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைப்பதற்காக 2011 ஆம் ஆண்டின் போது அதிகாரச்சட்டத்தின் வரைபில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த அதிகாரச்சட்ட வரைபினைக் கொண்டு வருவதற்கான முக்கிய நோக்கமானது இலங்கை கையெழுத்திட்ட சர்வதேச வலய உடன்படிக்கைகளுக்கு அமுல்படுத்தும் அதிகாரத்தினை வழங்குவதாகும். தண்டப் பணத்தை உள்ளடக்குவதற்காக 59 ஆவது பிரிவினை திருத்தம் செய்யும் போது அனைத்து மாகாண சபைகளின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனால் சட்ட வரைபினை அங்கீகரித்துக் கொள்வதற்காக நீண்டகாலம் எடுக்கும். ஐரோப்பிய சங்கத்திற்குரிய நாடுகளுக்கு மீன்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் இலங்கைக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நாணயமாற்று இழக்கப்படுவதனைத் தவிர்ப்பதற்காக வரைபின் ஏனைய பதிவுகளுக்கு முன்னுரிமை வழங்குதல் அவசியமாகும். | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அதிகாரச்சட்டத்தில் காட்டப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக கடற்றொழில் வெகுமதி நிதியத்தை வலுப்படுத்தி சுற்றிவளைப்புச் செய்கின்ற உத்தியோகத்தர்களுக்கு போதியளவான படிகளைச் செலுத்துவற்கு தேவையான நடைமுறைகளை தயாரித்தலில் உயர் முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (இ) | திணைக்களத்தால் சட்ட விரோத கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சம்பந்தமான வழக்கு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது | மாவட்ட உதவிப் பணிப்பாளர்களால் உரிய வழக்கு அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு தொடர்ச்சியாக முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். | வழக்கு அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சம்பந்தமாக 2014 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | தடைசெய்யப்பட்ட வலைகள் கருவிகளைப் பயன்படுத்தி சட்ட விரோதமாக மீன்பிடித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை கடற்றொழில் உத்தியோகத்தர்கள் விடுவித்தமை பற்றி கடற்படை அடிக்கடி கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்கு தெரிவித்திருந்தது. தொடர்ச்சியாகக் கடமைகளில் ஈடுபட்டுள்ள கடற்படை கைதுசெய்த மீன்பிடி படகுகள் தொடர்பாக மாவட்ட அலுவலகத்திற்குத் தெரிவித்திருந்தும் அவர்கள் பெரும்பாலும், வருகை தராமை அல்லது தாமதித்து வருகை தந்தமை அல்லது படகுகளை விடுவித்தல் இடம்பெறுவதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும் அது சம்மந்தமாக எதுவித நடவடிக்கையோ அல்லது விசாரணைகளோ நடாத்தப்படாததுடன் சட்டவிரோத செயற்பாடுகளுக்காக கைதுசெய்யப்பட்ட படகுகளை எதுவித நீதிமன்ற பணிப்புரைகளுமின்றி விடுவித்ததன் மூலம் சட்டவிரோத செயற்பாடுகளுக்காக உதவியளிப்பதனைப் போல அரசாங்க வருமானங்கள் இழக்கப்படுகின்றது என்பதுவும் கணக்காய்வின் கருத்துரையாகும். | திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவு புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளதனால் எப்போதும் இவ்வாறான முறைப்பாடுகள் சம்மந்தமாக அப்பிரிவின் மூலம் விசாரணைகளை நடாத்துவதற்கு 2019 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கையின் பெறுமதியான வளங்களான கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களை முறையற்ற வகையில் பயன்படுத்துகின்ற தரப்பினர்களை குறைப்பதற்காக சுற்றி வளைப்புக்களில் பங்குபெறும் உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்காக போதியளவு படிகளை விரைவாகச் செலுத்தும் போதிய நடைமுறையினை தயாரித்தல் முகாமைத்துவத்தினால் செய்யப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வின் அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 1996 இன் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அதிகாரச்சட்டத்தின் 59(3) ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் 51(4) ஆம் உப பிரிவின் பிரகாரம் வெகுமதி நிதியத்தின் நிருவாகம் சம்பந்தமாக பணிப்பாளர் பொறுப்புக்கூற வேண்டியுள்ள போதிலும், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காகத் திட்டங்களில் வெகுமதி நிதியத்தின் செயற்பாடுகளை இனங்கண்டு வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காகத் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இந்நிதியத்தின் செயற்பாடுகளையும் உள்ளடக்குவதற்காக உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளேன். | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அதிகாரச்சட்டத்தின் 59(3) ஆம் பிரிவின் பிரகாரமும் 51(4) ஆம் உப பிரிவின் பிரகாரமும் வெகுமதி நிதியத்தின் செயற்பாடுகளை இனங்கண்டு அதனை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக தேவையான திட்டங்களைத் தாயாரித்து அமுல்படுத்தப்படுதல் வேண்டும். |